# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com


ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 120 | செவ்வாய்க்கிழமை Tuesday | 28.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


## காமன்வெல்த் போட்டியில் வெள்ளி பதக்கம்:

# வீரர் ராஜா முத்துப்பாண்டிக்கு முதலமைச்சர் விஜய் வாழ்த்து; ரூ.30 லட்சம் ஊக்கத்தொகை அறிவிப்பு





சென்னை: காமன்வெல்த் பளுதூக்கும் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ள தூத்துக்குடி வீரர் ராஜா முத்துப்பாண்டிக்கு முதல்வர் விஜய் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார். அத்துடன், அவரது சாதனையைப் சிறப்பிக்கும் வகையில் அரசின் சார்பில் ரூ.30 லட்சம் ஊக்கத்தொகை வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் விஜய்தனதுஎக்ஸ்தளத்தில், "ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்றுவரும் 23-வது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில், ஆண்களுக்கான 65 கிலோ பளுதூக்கும் எடைப் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ள தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த வீரர் ராஜா முத்துப்பாண்டிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள் மற்றும் பாராட்டுகள்.

ராஜா முத்துப்பாண்டியின் சாதனையைப் பாராட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் உயரிய ஊக்கத்தொகையாக 30 லட்சம் ரூபாய் வழங்கப்படும். அவரது வெற்றி, இளைஞர்களுக்கு புதிய உத்வேகத்தையும் நம்பிக்கையையும் அளிக்கட்டும். அவர், மேலும் பலசாதனைகள்படைத்து இந்திய திருநாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்க்க எனது வாழ்த்துகள்" இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் நடைபெறும் காமன்வெல்த் விளையாட்டு போட்டியில் 1 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலம் என இந்தியா இதுவரை 4 பதக்கங்கள் வென்றுள்ளது. இதில் நேற்று நடைபெற்ற ஆடவர் 65 கிலோ பளுதூக்குதல் பிரிவு போட்டியில் பங்கேற்ற ராஜா முத்துப்பாண்டி, மொத்தமாக 286 கிலோவைத் தூக்கிவெள்ளிப்பதக்கம் வென்றார்.

கடந்த 2018-ல் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டு போட்டியில் 62 கிலோ எடைப்பிரிவில் பங்கேற்ற அவர், மொத்தமாக 266 கிலோ தூக்கி ஆறாம் இடம் பிடித்தார். அதன் பின்னர் காயம், அதற்கான சிகிச்சை உள்ளிட்ட காரணத்தால் சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கு கொள்ள முடியாமல் இருந்தார்.

இந்நிலையில், கடந்த ஆண்டு நடைபெற்ற காமன்வெல்த் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் மூலம் சர்வதேச களத்துக்கு திரும்பினார். தற்போது வெள்ளி வென்றுள்ளார்.

## பாளையங்கோட்டை சிறையில் திமுக எம்.எல்.ஏ. மார்க்கண்டேயனை நேரில் சந்தித்த உதயநிதி ஸ்டாலின்:

# "விமர்சனத்துக்காக கைது செய்யும் அரசு மக்கள் மன்றத்தில் சரிவை சந்திக்கும்" எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு




"விமர்சனத்துக்காக செய்யப்படும் ஒவ்வொரு கைதின்போதும் நீதிமன்றத்திடம் குட்டுப்படும் இந்த ஆட்சியாளர்கள், மக்கள் மன்றத்திலும் சரிவை சந்திப்பது உறுதி" என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி: தமிழக முதலமைச்சர் விஜய்யை அவதூறாக பேசியதாக கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டை சிறையில் உள்ள திமுக எம்எல்ஏ மார்க்கண்டேயனை எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் நேரில் சந்தித்து பேசினார். தமிழக முதலமைச்சர் குறித்து அவதூறாக பேசியதாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட விளாத்திகுளம் திமுக எம்எல்ஏ மார்க்கண்டேயன், திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.கடந்தஒருவாரமாக பாளையங்கோட்டை மத்திய சிறையில் மார்க்கண்டேயன் உள்ள நிலையில்,அவரைதிமுக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி மற்றும் முன்னாள் அமைச்சர்கள் கே.என். நேரு, ரகுபதி ஆகியோர் நேரில் சந்தித்து நலம் விசாரித்திருந்தனர்.

அதைத் தொடர்ந்து, இன்று எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பாளையங்கோட்டை மத்திய சிறைக்கு வந்து, மார்க்கண்டேயனை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். சுமார் 30 நிமிடங்கள் நடந்த இந்த சந்திப்பின்போது தேவையான சட்ட உதவிகளை திராவிட முன்னேற்ற கழகம் வழங்கும் என மார்க்கண்டையனிடம் உதயநிதிஸ்டாலின் உத்தரவாதம் அளித்ததாக கூறப்படுகிறது.

உதயநிதி ஸ்டாலின் உடன் முன்னாள் சட்டப்பேரவை தலைவர் அப்பாவு,முன்னாள்அமைச்சர்கள் கீதா ஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோரும் வருகை தந்திருந்தனர். மேலும் உதயநிதி ஸ்டாலினை பார்ப்பதற்காக திமுக நிர்வாகிகள் தொண்டர்கள் 200-க்கும் மேற்பட்டவர் சிறை முன்பு கூடி இருந்தனர். அவர்கள் உதயநிதி உள்ளேவந்ததும்'கலைஞரின் பேரன் வாழ்க'என உணர்ச்சி பொங்க கோஷங்கள் எழுப்பினர்.

கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்பு மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கேற்று கைது செய்யப்பட்டார். அப்போது கருணாநிதி திருநெல்வேலியில் உள்ள பாளையங்கோட்டை மத்திய சிறையில் தான் அடைக்கப்பட்டு இருந்தார்.அவர் இங்கு சுமார் 60 நாட்கள் சிறையில் இருந்தார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "சர்வாதிகார சோ:.பா மாடல் அரசால் பழிவாங்கும் நோக்கத்தில் கைது செய்யப்பட்டுள்ள திமுக சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயனை பாளையங்கோட்டை மத்திய சிறையில் இன்று சந்தித்தோம்.

சிறையில் இருந்தாலும் முன்பை விட இன்னும் வேகமாக கட்சி மற்றும் மக்கள் பணியாற்றிடும் உத்வேகத்துடன் உள்ள மார்க்கண்டேயனிடம் நலம் விசாரித்தோம். அவரின் விடுதலைக்காக திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி, வழக்கறிஞர்கள் மேற்கொண்டு வரும் சட்ட நடவடிக்கைகளை எடுத்துக்கூறி ஆறுதல் தெரிவித்தோம்.

மிசா - எமர்ஜன்சியை பார்த்தது திமுக. தத்தித்தாவி ஆட்சிக்கு வந்து தறிகெட்டு அரசு நடத்தும் சோ:.பா அரசின் கைது நடவடிக்கைகளுக்கு எல்லாம் திமுகவின் கடைக்கோடி தொண்டர்கள்கூடஅஞ்ச மாட்டார்கள்.

விமர்சனத்துக்காக செய்யப்படும் ஒவ்வொரு கைதின்போதும் நீதிமன்றத்திடம் குட்டுப்படும் இந்த ஆட்சியாளர்கள், மக்கள் மன்றத்திலும் சரிவை சந்திப்பது உறுதி" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மக்களவையில் பொதுத்தேர்வுகள் சட்ட திருத்த மசோதா அறிமுகம்



நீட் உள்ளிட்ட தேர்வுகளில் முறைகேடுகளை தடுப்பதற்காக மக்களவையில் பொதுத்தேர்வுகள்சட்டதிருத்தமசோதா அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகளின்அமளிக்குஇடையே மசோதாவை மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் அறிமுகம் செய்தார். வினாத்தாள் கசிவு, தேர்வு தொடர்பான மோசடிக்ளில் ஈடுபடுவோருக்கு கடும் தண்டனை வழங்க சட்டத்தில் திருத்தம் செய்யப்பட உள்ளது.முறைகேட்டின் தீவிரத்தை பொறுத்து 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கும் வகையில் திருத்தம் செய்யப்படும். திட்டமிட்டு குற்றத்தில் ஈடுபடுபவர்களுக்கு குறைந்தபட்சம் 7 ஆண்டு சிறை; ரூ.10 கோடி வரை அபராதம் விதிக்கப்படும்.

மேல் முறையீடு வழக்குகள் மூன்று மாதத்திற்குள் முடிக்க வேண்டும்; தவறு செய்யும் நிறுவனங்கள் பொதுத்தேர்வுகளை நடத்த விதிக்கப்படும் தடை காலம் 8 ஆண்டுகளாக உயர்த்தப்படும் உள்ளிட்ட சரத்துகள் மசோதாவில் இடம் பெற்றுள்ளன. மாணவர்கள் மீதான தாக்குதலை கண்டித்தும்,மத்திய அரசு பதிலளிக்க வலியுறுத்தியும் எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஈடுபட்டன. அமளிக்கு இடையே இந்த மசோத தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற விவகாரத்துறை மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறுகையில், பொதுத் தேர்வுகள் (முறைகேடுகளைத்தடுக்கும்)திருத்த மசோதா, 2026-க்கு அனைத்து அரசியல் கட்சிகளும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். வினாத்தாள் கசிவு சம்பவங்களில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனையை உறுதி செய்வதற்கும், மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கும் இந்த மசோதா மிகவும் முக்கியமானது.

இப்போதைய சூழலில் இதுவே நாடாளுமன்றத்தின் முதன்மை விவாதப் பொருளாக இருக்கவேண்டும்.வேறு எந்த விவகாரத்தையும் கொண்டு வந்து கவனத்தை திசைதிருப்பக் கூடாது.

எதிர்க்கட்சிகளின் விமர்சனங்கள் முற்றிலும் தவறானவை. இந்த மசோதாவை எந்த நிலையிலும் நிறைவேற்று வதே அரசின் நோக்கம். இந்த சட்டம் அமலுக்கு வந்தால் வினாத்தாள் கசிவில் ஈடுபடுவோருக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்கப்படும்.

பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ள தேர்வு சீர்திருத்த நடவடிக்கைகளின் முக்கிய அங்கமாகஇந்தமசோதா இருக்கிறது" என்றார்.


செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தேவகோட்டையில் அப்துல்கலாம் நினைவு தினம்: மாணவர்களுக்கு டி.எஸ்.பி. கண்ணன் பரிசு வழங்கி பாராட்டு

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டையில் உள்ளசேர்மன்மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் நினைவு தினத்தை முன்னிட்டு பல்வேறு போட்டிகள் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



நிகழ்ச்சிக்கு ஆசிரியர் ஸ்ரீதர் வரவேற்புரை வழங்கினார். பள்ளி தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் முன்னிலை வகித்தார். தேவகோட்டை துணைக் காவல் கண்காணிப்பாளர்(டி.எஸ்.பி.)கண்ணன் தலைமை தாங்கி, மாணவர்களிடம் சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசுகையில், "ஒரு மனிதனின் வெற்றிக்கு மிக முக்கியமானது முயற்சி; அதிலும் விடாமுயற்சி அவசியம். மாணவர்கள் சிறப்பாகக் கல்வி கற்று, வாழ்க்கையில் உயர்ந்து தங்கள் ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் பெருமைசேர்க்கவேண்டும்.ஆசிரியர்கள்வழங்கும் பணிகளை சுமையாகக் கருதாமல் பொறுப்புடன் நிறைவேற்ற வேண்டும். தங்களை விட வயதில் இளையவர்களுக்கு உதவும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். தினக்கூலி தொழிலாளர்களாக உழைக்கும் பெற்றோரின் கஷ்டத்தை உணர்ந்து, கல்வியில் முழு கவனம் செலுத்த வேண்டும். டாக்டர் அப்துல் கலாம் கூறிய உயரிய சிந்தனைகளையும் வாழ்க்கை நெறிகளையும் பின்பற்றி வாழ வேண்டும்" என்றார்.

இதனைத் தொடர்ந்து அப்துல் கலாமின் பொன்மொழிகள் ஒப்புவித்தல், கவிதை வாசித்தல்,பேச்சுப்போட்டி மற்றும் ஓவியப் போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றமாணவ,மாணவிகளுக்கு டி.எஸ்.பி. கண்ணன் பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

நிகழ்ச்சியின் நிறைவில் மாணவி நந்தனா நன்றியுரை வழங்கினார்.



தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 27.7.26 நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறைகளையும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் .ரஞ்ஜீத் சிங்பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று,குறைகளைமாவட்டஆட்சித்தலைவர்ச.கந்தசாமி நேற்று (27.07.2026) கேட்டறிந்தார்.




## கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்

# அரசு வழங்கிய பட்டாவிற்கான இடத்தை அளந்து தரக்கோரி மனு!

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தாழ்த்தப்பட்ட சமூக மக்களுக்கு, அரசால் வழங்கபடும் இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்கவேண்டும்என்று தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக கோரிக்கை மனு அளிக்க பட்டது..

கோவை சிவாஜி காலனி பகுதியில்தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை மண்டல தலைமை அலுவலகம் செயல்பட்டு வருகின்றது. இதன் மாநில துணைத்தலைவராக வழக்கறிஞரும், சமூக ஆர்வலருமான, புஷ்பானந்தம் இருந்து வருகிறார். இவரது தலைமையில் இன்று, பல்வேறு பகுதியை சேர்ந்த பொதுமக்கள் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு இலவச வீட்டு மனை பட்டா கேட்டு பதாகைகளை ஏந்தியவாறு, போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் பொதுமக்கள், மனுக்களாக எழுதி கோவை மாவட்ட ஆட்சியரிடம் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வழங்கினர். முன்னதாக செய்தியாளர்களிடம்பேசியவழக்கறிஞர் புஷ்பானந்தம் கூறியதாவது.. கோவை மாவட்டத்தில்நெம்பர்24, வீரபாண்டி கிராமத்தில், ஏக்கர் கணக்கான புறம்போக்கு இடங்கள் உள்ளது. குறிப்பாக கா.சா எண் 125/1 இல் 10 ஏக்கருக்கும் மேற்பட்ட புறம்போக்கு இடங்கள் உள்ளது.கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக, இலவச வீட்டுமனை பட்டா கேட்டு மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது. அந்த மனுவின் அடிப்படையில் அதிகாரிகள் ஆய்வு செய்து, பாதி பேருக்கு பட்டா கொடுத்துள்ளனர். பாதி பேருக்கு பட்டா கொடுக்கப்படவில்லை. அவ்வாறு கொடுக்கப்படாமல் உள்ளபொதுமக்களுக்கு உடனடியாக வீட்டுமனை பட்டாக்களை வழங்க முன்வர வேண்டும், வீட்டுமனை பட்டா கொடுத்தவர்களுக்கு அந்த பட்டாவிற்கான இடத்தை அளவீடு செய்து, உடனடியாக அவர்கள் தங்களது வீடுகளை கட்ட உதவி புரிய வேண்டும் என்று அவர் தெரிவித்தார். குறிப்பாக கோவை தடாகம் சாலை, வேலாண்டிபாளையம், பன்னிமடை, கணபதி, கவுண்டம்பாளையம்அசொக்நகர், போன்ற பகுதியை சேர்ந்த மக்கள் இன்றுவரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும், வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்திற்கும், பலமுறை வீட்டு மனை பட்டா அலைந்து வருகின்றனர். எனவே மாவட்டஆட்சியர்அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து, தாழ்த்த பட்ட சமூகஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை கொடுக்க முன்வரை வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர் குமாஸ்தா செல்வராஜ், கவுண்டம்பாளையம் செல்வி, வசந்தாமணி, மரகதம், நந்தினி,சந்தோஷ்குமார், ஹரி, வடவள்ளி முத்து செல்வி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாடு, புதுச்சேரி 31ம் தேதி முதல் பிராய்லர் கோழி விற்பனை நிறுத்தம்: கோழி வணிகர்கள் கூட்டமைப்பு அறிவிப்பு



தமிழ்நாடு முழுவதும் ஜூலை 31 முதல் பிராய்லர் கோழி விற்பனை நிறுத்தப்படும்என்றும்60,000 கடைகளில் பிராய்லர் கோழி விற்கப்படாது என்றும் கோழி வணிகர்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. இதனால்,இரு மாநிலங்களிலும் கோழிக்கறி தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளதாக வணிகர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த அறிவிப்பு தொடர்பாகதஞ்சாவூரில்தமிழ்நாடு கோழி வணிகர்கள் கூட்டமைப்பின் மாநில அவசர செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான கோழி வணிகர்கள் பங்கேற்று ஆலோசனை நடத்தினர். பிராய்லர் கோழிகளுக்கான தீவனக் கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை அரசு அனைத்து மண்டல மற்றும் மாவட்ட கால்நடைத்துறை அதிகாரிகளுக்கும் தெளிவாக அறிவுறுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. விற்பனைக்காக அனுப்பப்படும் கறிக்கோழிகளுக்கு குறைந்தது 15 மணி நேரத்திற்கு முன்பே தீவனம் வழங்குவதை நிறுத்த வேண்டும். அப்படி தீவனங்களை வழங்கினால், கோழியின் இறைப்பையில் 100 கிராம் முதல் 200 கிராம் வரை தீவனமும் தண்ணீரும் தங்கிவிடும்.கோழி வாங்கும் போது,சுமார் 150 கிராம் வரை செரிக்காத தீவனமாக இருக்கும். இதனால் வாடிக்கையாளருக்கு பண நஷ்டம் ஏற்படும் என்பது வணிகர்களின் குற்றச்சாட்டாக உள்ளது.அதேபோல் கோழியை வெட்டி சுத்தம் செய்யும் போது, இறைப்பையில்உள்ளசெரிக்காததீவனமும்அதோடுசேர்ந்த கழிவுகளும் கறியில் சிந்தி இறைச்சியைப் பாழாக்கிவிடுவதாக வணிகர்கள் குற்றம்சாட்டுகிறார்கள். இதன் காரணமாக சுத்தமான இறைச்சியை வழங்க முடியாத நிலை ஏற்படும் என்றும் வணிகர்கள் கவலை தெரிவிக்கிறார்கள். தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வரும் 31ம் தேதி முதல் பிராய்லர் கோழி விற்பனை நிறுத்தப்படுவதாக விற்பனையாளர்கள் அறிவித்துள்ளனர். மேலும், அன்றைய தினம் முதல் கோழி வணிகர்கள் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட உள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் தெருமுனை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது



அச்சன்புதூர் கிளை தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் "அண்ணல் நபியே அழகிய முன்மாதிரி" என்ற தொடர் தாஃவா பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக "பெண்ணுரிமை போற்றிய பெருமானார்" என்ற தலைப்பில் தெருமுனை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் வடகரை செய்யதலி மற்றும் முர்ஷிதா பானு சிறப்புரையாற்றி, நபிகள் நாயகம் (ஸல்) பெண்களுக்கு வழங்கிய கல்வி, சொத்துரிமை, கண்ணியம் மற்றும் பாதுகாப்பு குறித்து விளக்கினர்.

கூட்டத்தில் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர். மேலும், வந்தே மாதரம் மசோதா, நீட், வினாத்தாள் கசிவு சட்டம், தெருநாய் தொல்லை, VBSA மசோதா, முஸ்லிம்களின் இடஒதுக்கீடு, அச்சன்புதூர் சாலை சீரமைப்பு, வாறுகால் தூர்வாருதல் உள்ளிட்ட 9 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## ஆதித்தமிழன் வீர சிலம்பாட்ட கலைக்கூடம் மற்றும் ஸ்ரீ சுகா பர்மா, மஹாரிஷி வித்யா மந்திர், இன்டர்நேஷனல் பள்ளி இணைந்து நடத்திய

# நோபல் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் நிகழ்ச்சி 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்று அசத்தினர்



கோவை கண்ணம்பாளையம் மற்றும் நடுப்பாளையம் ஆகிய பகுதியில், கடந்த 13 ஆண்டுகளாக ஆதித்தமிழன் வீர சிலம்பாட்டம் கலைக்கூடம் மற்றும் எர்த் ட்ராகன் மார்ஷியல் ஆர்ட்ஸ் எனும் பயிற்சி மையத்தை, சிலம்ப ஆசாம் நாகசுந்தரம் நடத்தி வருகின்றார்.

இங்கு மாணவ மாணவியர்களுக்கு கராத்தே, சிலம்பம் உள்ளிட்ட பல்வேறுபயிற்சிகள் அளிக்க பட்டு வருகின்றது. இங்கு சுமார், 2000க்கும் மேற்பட்ட மாணவர்கள் சிலம்பம்,கராத்தே,உள்ளிட்டபயிற்சிகளைபெற்றுள்ளனர்.

மேலும்500க்கும்மேற்பட்ட மாணவ,மாணவர்களை, போட்டிகளுக்கு தயார் செய்து, மாவட்ட, மாநில மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில்,பங்கேற்க்க வைத்து வெற்றிபெறவைத்துள்ள அகாடமியாக இந்த பயிற்சி மையம் செயல்பட்டு வந்த நிலையில் தலைமை ஆசான் நாகசுந்தரம் தலைமையில், ஆதித்தமிழன் வீரசிலம்பாட்ட கலைக்கூடம் மற்றும் ஸ்ரீ சுகா பர்மா மகரிஷி வித்யா மந்திர் இன்டர்நேஷனல் பள்ளி இணைந்து நடத்திய மாபெரும் நோபல் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் நிகழ்ச்சி பாப்பம் பட்டி பகுதியில் உள்ள பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சுமார் 500க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள்,கராத்தே,மற்றும் சிலம்பம் செய்து அசத்தினர். இதில் சிலம்பம் மூன்று மணி நேரம் 26 நிமிடங்கள் தொடர்ந்து கண்களை கட்டி சிலம்பம் சுற்றி மாணவர்கள் சாதனை படைத்தனர். கராத்தே மாணவர்கள் ஒரு மணி நேரம்,30 நிமிடங்கள் தொடர்ந்து கராத்தே செய்து இச்சாதனையை செய்து அசத்தினர். இவர்களின் இந்த சாதனையை அங்கீகரித்த நொபல் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் அமைப்பு அனைவருக்கும் சான்றிதழ்கள், மெடல்கள், மற்றும் பரிசுகளை வழங்கியது. மேலும் இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சூலூர் சட்ட மன்ற உறுப்பினர், சுகுமார் மாணவ மாணவியர்கள் மத்தியில் இந்த சாதனையை பாராட்டி வாழ்த்துகள் கூறினார். இந்த நிகழ்ச்சியில் பள்ளியின் இயக்குநர் அபாராமி, பள்ளியின் பிரின்ஸ்பல் பிரபா, பள்ளியின் கரஸ்பான்டட் நாகராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தருமபுரி அருகே ரயில் பெட்டியில் ‘திடீர்’ தீ 2வது நாளக நீடிக்கும் விசாரணை



தருமபுரி: பெங்களூரிலிருந்து சேலம் நோக்கிசென்று கொண்டிருந்த பயணிகள் ரயிலின் சக்கரப்பகுதியில்திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இது தொடர்பாக 2-வது நாளாக இன்னும் அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

பெங்களூரு யஸ்வந்த்பூரில் இருந்து சேலம் செல்லும் பயணிகள் ரயில் நேற்று இரவு 7.13 மணிக்கு தருமபுரி ரயில் நிலையத்தில் உள்ள முதலாவது நடைமேடைக்கு வந்தடைந்தது. அப்போது ரயிலின் ஐந்தாவது பெட்டியின் கீழ் உள்ள சாக்கப்சாரில் உள்ள ஸ்பிரிங் தீப்பிடித்து எரிந்தது. இதனைக் கண்ட ரயில்வே பாதுகாப்பு படையினர், ரயில் ஓட்டுநருக்கு தகவல் தெரிவித்தனர். தொடர்ந்து ரயில்வே காவல்துறையினர்,ரயில்வேஊழியர்கள் இணைந்து தீயை அணைத்தனர். இதனைத் தொடர்ந்து தீ முழுவதுமாக அணைக்கப்பட்டு, 47 நிமிடங்கள் கால தாமதமாக பேசஞ்சர் ரயில் தருமபுரியில் இருந்து சேலம் நோக்கி புறப்பட்டது.

சம்பவம் ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்டு தீ அணைக்கப்பட்டதால் பெரிய அளவிலான சேதமும், உயிரிழப்பும் தவிர்க்கப்பட்டது. திடீரென ரயிலில் தீப்பிடித்ததால் பயணிகள் மத்தியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

இதனிடையே ரயில்வே அதிகாரிகள் சம்பவம் தொடர்பாக 2-வது நாளாக இன்றும் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# ஈரோடு, சேலம் இடையே பராமரிப்பு பணிகள்: கேரள ரெயில்கள் தாமதமாக இயக்கம்



ஈரோடு – சேலம் இடையே உள்ள மகுடஞ்சாவடி பகுதியில் ரெயில் தண்ட வாள பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் கேரள ரெயில்கள் தாமதமாக இயக்கப்பட உள்ளது. இதுகுறித்து சேலம் ரெயில்வே நிர்வாகம் வெளியிட் டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:-(திங்கட்கிழமை) மற்றும் நாளை மறுநாள் (புதன்கிழமை), 1-ந்தேதி. 3-ந்தேதி எர்ணாகுளம்டாடாநகர்விரைவுரெயில்(எண்:18190) 50 நிமிடங்கள் தாமதமாக இயக்கப்படும். இதேபோல் மேற்கண்ட நாட்களில் ஆலப்புழா-தன்பாத் விரைவு ரெயில் (எண்:13352) 20 நிமிடங்கள் தாமதமாக இயக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

# ஆலங்குளம் டிபிவி மில் வளாகத்தில் தமிழக வெற்றி கழகத்தில் மாற்றுக்கட்சியினர் இணையும் விழா

தென்காசி தெற்கு மாவட்டம் ஆலங்குளம் டிபிவி மில் வளாகத்தில், தமிழக வெற்றி கழகத்தில் மாற்றுக் கட்சியினர் இணையும் விழா நடைபெற்றது.



இந்நிகழ்ச்சிக்குதென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் டி.பி.வி. விபின் சக்கரவர்த்தி தலைமை வகித்தார்.

கடையம்தவெகமேற்கு ஒன்றியசெயலாளர்சங்கர் முன்னிலையில்

அதிமுக மாவட்ட மகளிர் அணி செயலாளரும்,செயற்குழு உறுப்பினரும்,கடையம் ஒன்றிய கவுன்சிலருமான ஜனதா காமராஜ் உடன் கடையம் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட கோவிலூற்று, மணக்கட்ட, நல்லூர், வடமலைப் பட்டி, லெட்சுமியூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான மாற்றுக் கட்சியினர் தமிழக வெற்றி கழகத்தில் இணைந்தனர்.

புதியதாக இணைந்த அனைவரையும் சால்வை அணிவித்து மாவட்ட செயலாளர் டி.பி.வி. விபின் சக்கரவர்த்தி வரவேற்று வாழ்த்தினார்.

நிகழ்ச்சியில் தமிழக வெற்றி கழகத்தின் நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும்ஏராளமானகட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடி பனிமய மாதாவின் 444வது திருவிழா கொடியேற்றத்துடன் கோலாகலத் தொடக்கம்

உலகப் புகழ்பெற்ற தூத்துக்குடி தூய பனிமய மாதா பேராலயத்தின் 444-வது ஆண்டுத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.



தூத்துக்குடியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற பனிமய மாதா பேராலயத்தில் ஆண்டுதோறும் ஜூலை 26-ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 5-ஆம் தேதி வரை 11 நாட்கள் பெருவிழா சிறப்பாக நடைபெறுவது வழக்கம்.

அதன்படி, இந்த ஆண்டின் 444-வது பெருவிழாவை முன்னிட்டு நேற்று காலை 5 மணிக்கு முதலாம் திருப்பலியும், 6 மணிக்கு இரண்டாம் திருப்பலியும் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து, தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் ஸ்டீபன் தலைமையில், பேராலயப் பங்குத்தந்தை ஸ்டாரின் முன்னிலையில் பனிமய மாதாவின் உருவம் பொறிக்கப்பட்ட திருக்கொடி எடுத்து வரப்பட்டது.

பேராலய வளாகத்தில் உள்ள கொடிமரத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்களின் ஜெபத்துடனும், கரவொலியுடனும் திருக்கொடி ஏற்றிவைக்கப்பட்டது. அப்போது உலக அமைதியை வலியுறுத்தும் வகையில் பக்தர்கள் வெண்புறாக்களைப் பறக்கவிட்டனர். கொடியேற்றத்திற்கு முன்னதாகப் பக்தர்கள் நேர்த்திக்கடனாகக் கொண்டுவந்த பால் மற்றும் பழங்கள் கொடிமரத்தில் வைக்கப்பட்டு, பின்னர் அனைவருக்கும் வழங்கப்பட்டன. கொடியேற்ற நிகழ்வைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு பனிமய மாதாவுக்குப் பொன் மகுடம் அணிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் த.சரத்குமார், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஆ.ஸ்ரீநாத், மாவட்ட ஆட்சியர் விஷா மகாஜன்,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் குப்தா உள்ளிட்ட முக்கியப்பிரமுகர்களும்,ஆயிரக்கணக்கான பக்தர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

ஆகஸ்ட் 5-ஆம் தேதி வரை 11 நாட்கள் நடைபெறும் இத்திருவிழாவில் நாள்தோறும் பல்வேறு மொழிகளில் சிறப்புத் திருப்பலிகள், பிரார்த்தனைகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. விழாவின் சிகர நிகழ்ச்சியான தேர் பவனி ஆகஸ்ட் 5-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதனையொட்டி ஆகஸ்ட் 5 அன்று தூத்துக்குடி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. விழாநாட்களை முன்னிட்டுத்தூத்துக்குடி நகரம்விழாக்கோலம்பூண்டுள்ளதுடன், பலத்த காவல் துறை பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது.



# தளவாய்புரத்தில் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமின் 11வது நினைவு தினம் மரக்கன்றுகள், பனைவிதைகள் நடும் விழா

முன்னால் ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்களின் 11-வது நினைவு நாளை முன்னிட்டு உயிர்நாடி அறக்கட்டளை மற்றும் இயற்கைவனம் அறக்கட்டளை இணைந்து நெல்லை மாவட்டம் பணகுடி அருகே தளவாய்புரத்தில் அனுமன் நதி கரையோரம் மரக்கன்றுகள் பனை விதைகள் நடும் விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது இந்நிகழ்வில் உயிர்நாடி அறக்கட்டளை நிறுவனர். சேவரத்னா முனைவர்.ம.வை குண்டமணி. தலைமை தாங்கினார் இயற்கை வனம் அறக்கட்டளை நிறுவனர் முனைவர் பிரபாகரன் முன்னிலை வகித்தார் சிறப்பு அழைப்பாளராக ஜோ.பி.ஜெகன் . சட்டகளஞ்சியம் ஆசிரியர் கலைமணி. ஆதிநாராயணன்.துரை நடராஜன். முத்துராமன்.

கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் மேலும் இந்நிகழ்வில் இன்பாமுத்துராஜ். செல்வின் பிரேம்குமார்.டதிசன்.நாகராஜன். பொன்கலம். தாசன்.முருகேசன். டல்சின்.ஹரிதாஸ். ரோஜர்சன். முத்து. மற்றும் ஊர்பொதுமக்கள் கோவில் தர்மகர்த்தா மற்றும் பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்


ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று (27.07.2026) நடைபெற்றது.



இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, ஆதார் கார்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தார்சாலை, மகளிர் உரிமைத்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை,வேலைவாய்ப்பு, கல்விக்கடன், தொழில் கடன், குடிநீர் வசதி, சாலை வசதி, அடிப்படை வசதிகள் மேம்பாடு, இலவச வீட்டுமனை பட்டா, தனிப்பட்டா மாறுதல், மின்னணு குடும்ப அட்டை, மின் இணைப்பு, தெரு விளக்கு, ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் எனமொத்தம்385மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர்கள், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்திற்கு வருகை தந்த பொதுமக்களிடம் மக்கள் தொகை கணக்கெடுப்பின் அவசியம் மற்றும் சுய கணக்கெடுப்பின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்களை வழங்கினர்கள். மேலும், பொதுமக்கள் தங்களது கைப்பேசிகள் மூலம் இணையவழிசுயகணக்கெடுப்பை மேற்கொள்ள வசதியாக பதிவு செய்வதற்கு வழிகாட்டுதல்களை வழங்கினர்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் விஜய் ராஜ்குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் மகேஸ்வரி, மாவட்ட பிற்படுத்த ப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்நல அலுவலர் ஜாகீர் உசேன், அனைத்துத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் அண்ணாநகர் பகுதியில் Apex Bridge Capital Limitedன் திறப்பு விழா இனிதே திறக்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழக வடக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான விஜய் அன்பன் கல்லாணை திருகரங்களால் ரிப்பன் வெட்டி துவைக்கி வைத்தார் மதுரை மாநகர் காவல் துறை உதவி கமிஷனர் சிவசக்தி திராவிட முன்னேற்ற கழக ஆனையூர் பகுதி செயலாளர் மருதுபாண்டியன் Apex Bridge chairman நவாஸ் ஹமீது குஞ்சு vice chairman and Director Guru உள்ளிட்ட மதுரையின் முக்கிய பிரமுகர்கள் நண்பர்கள உறவினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# கோவை தடாகம் சாலை, சோமையனூரில் விகேவி குருப்ஸ் சார்பாக, 360 பள்ளி மாணவர்களுக்கு கல்வித்திறன் ஊக்கத்தொகை வழங்கும் விழா நிகழ்ச்சி

கோவைதடாகம்சாலை, 22 நஞ்சுண்டாபுரம் ஊராட்சிக்குட்பட்ட அரசுபள்ளிமாணவ மாணவிகளுக்கு விகேவி குருப்ஸ் சார்பாக, கல்வித்திறன் ஊக்கத்தொகை வழங்கும் விழாநடைபெற்றது.இதில் நஞ்சுண்டாபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றவர்கள் மற்றும் முதல் மூன்று இடம் பிடித்த மாணவ மாணவிகளுக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. விகேவி குருப்ஸ்சார்பாக, தொடர்ந்து 20 ஆண்டுகளாக கல்வித்திறன் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.



அதேபோல் இந்த ஆண்டு கல்வித்திறன் ஊக்கத்தொகை வழங்கும் விழா விகேவி இல்லத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் விகேவி குரூப் நிர்வாக இயக்குனர் விகேவி எஸ் வினிஸ் வரவேற்று பேசினார். விஜயலட்சுமி பொதுநல அறக்கட்டளை நிறுவனர் ஆறுமுகசாமி, நஞ்சுண்டாபுரம் ஊராட்சி மன்றமுன்னாள் தலைவர் விகேவி சுந்தர்ராஜ் ஆகியோர் மாணவ மாணவிகளுக்கு பரிசு வழங்கி பாராட்டினர்.

இதில் மனவளக்கலை மன்றம் தலைவர் வெள்ளியங்கிரி, உலகத் தமிழ்க் காப்புக் கூட்டியக்கம் புலவர் அப்பாவு, இலவச ஐ ஏ எஸ் தேர்வு பயிற்சி மைய பேராசிரியர் கனகராஜ், எஸ் பி எம் குரூப்ஸ் தலைவர் பச்சைமுத்து,பன்னீர்மடை ஊராட்சி முன்னாள் துணைத்தலைவர் மகேஸ்வரன், கணுவாய் அரசு உயர்நிலைப்பள்ளி பி டி ஏ தலைவர் பாரதி செல்வம்,முன்னாள் ஆசிரியர் மாணிக்கம், முன்னாள் ஊராட்சி துணைத்தலைவர்கள் மகேஸ்வரன், திருநாவுக்கரசு மற்றும் ஆசிரியர் சின்னராஜ், ஆர் ஆர் குரூப்ஸ் தியாகராஜன் ஆகியோர்வாழ்த்தி பேசி பரிசுகளை வழங்கினர். இதில் நஞ்சுண்டாபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மற்றும் முதல்மூன்று இடம்பிடித்த மாணவ மாணவிகளுக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. மேலும் சோமையனூர், உச்சையனூர், 22 நஞ்சுண்டாபுரம், ராமநாதபுரம், வரப்பாளையம், பாப்பநாயக்கன்பாளையம், திருவள்ளுவர் நகர் பகுதியில் உள்ள அரசு பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம்வகுப்புபொதுத்தேர்வு எழுதியசுமார்360மாணவ மாணவிகளுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் நஞ்சுண்டாபுரம் ஊராட்சி முன்னாள் தலைவர் விகேவி கார்த்திகேஸ்வரி சுந்தர்ராஜ்,முன்னாள் உறுப்பினர்கள் நாகராஜன், ஜெயந்தி, சோமசுந்தரம், ஆறுமுகம், கிருஷ்ணவேணி, குமாரசாமி, புஷ்பலதா, ஆனந்தன், திவ்யா, இந்திராணி, அம்சவேணி, அருண்குமார்ஆசிரியர்கள்,மாணவ மாணவிகள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிகளை சூர்யா என்கிற கே ஆர் தங்கவேல் தொகுத்து வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தூத்துக்குடி மாவட்ட 37வது காவல் கண்காணிப்பாளராக இரா. சிவபிரசாத் பொறுப்பேற்பு




தூத்துக்குடி மாவட்டத்தின் 37-வது மாவட்ட காவல் கண்காணிப்பாளராக (எஸ்.பி.) இரா. சிவபிரசாத் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி வந்த அபிஷேக் குப்தா பணியிட மாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, புதிய மாவட்ட காவல் கண்காணிப்பாளராக இரா. சிவபிரசாத் நியமிக்கப்பட்டிருந்தார்.

இதையடுத்து, தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு வந்த இரா. சிவபிரசாத்திற்கு காவல்துறை சார்பில் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. தொடர்ந்து, மாவட்ட காவல்துறையின் மூத்த அதிகாரிகள் மற்றும் காவல் அதிகாரிகள் அவருக்கு பூங்கொத்து வழங்கி வரவேற்பு அளித்தனர்.

பின்னர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள எஸ்.பி. அறையில் நடைபெற்ற நிகழ்வில், தூத்துக்குடி மாவட்டத்தின் 37-வது மாவட்ட காவல் கண்காணிப்பாளராக இரா. சிவபிரசாத் முறைப்படி பொறுப்பேற்றுக் கொண்டார்.

புதிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, காவல்துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அவருக்குவாழ்த்துதெரிவித்தனர்.

## திருநெல்வேலியில் சாதி ஆணவக்கொலைக்கு பலியான

# கவினின் முதலாம் ஆண்டு நினைவு நாள் அனுசரிப்பு: தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பு சார்பில் அஞ்சலி



திருநெல்வேலியில் சாதி ஆணவக் கொலைக்கு பலியான மென்பொறியாளர் கவின் செல்வகணேஷின் முதலாம் ஆண்டு நினைவு நாள் (ஜூலை 27) அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி நடைபெற்ற நினைவு நிகழ்ச்சியில், தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பின் சார்பில் அதன் நிறுவனத் தலைவரும், தமிழ்நாடு-புதுச்சேரி வக்ஃப் சொத்துக்கள் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு கமிட்டியின் மாநில ஒருங்கிணைப்பாளருமான தூத்துக்குடி சம்சுதீன் கலந்து கொண்டு கவின் உருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பின் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் பங்கேற்று, சாதி ஆணவக் கொலைகளுக்கு எதிராக குரல் கொடுத்து, கவின் செல்வகணேஷின் நினைவிற்கு அஞ்சலி செலுத்தினர்.

மேலும், சமூக நல்லிணக்கம் மற்றும் மனிதநேயத்தை பேணும் வகையில் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர்கள், சாதி அடிப்படையிலான வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க அரசு மற்றும் சமூக அமைப்புகள் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கருத்து தெரிவித்தனர். இந்நிகழ்வில் ஏராளமானோர் கலந்து கொண்டு மென்பொறியாளர் கவின் செல்வகணேஷின் நினைவிற்கு மரியாதை செலுத்தினர்.



## ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் விசிக மாநில பொருளாளர் எஸ்.எஸ்.பாலாஜி உளுந்தூர்பேட்டை மாநாடு பற்றி ஆலோசனை நடத்தினார்

ஈரோடு மாவட்டம் பெருந்துறை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் ஆகஸ்ட் 17 அன்று உளுந்தூர்பேட்டையில் நடைபெற உள்ள தமிழ் தேசிய எழுச்சி மாநாடு தொடர்பாக, பெருந்துறை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் வி.விஜயபாலன் தலைமையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநில பொருளாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.எஸ்.பாலாஜி, ஆலோசனை மேற்கொண்டார். நிகழ்வின் போது மாநாட்டிற்கு அழைத்து வரப்படும் உறுப்பினர்கள், வாகனங்களின் எண்ணிக்கை, சுவரொட்டி மற்றும் சுவர் விளம்பரப் பணிகள், கட்சி நிதி வழக்கம் குறித்து தொகுதிக்குட்பட்ட அனைத்து நிர்வாகிகளிடமும் அவர் விரிவாகக் கேட்டறிந்தார். இக்கூட்டத்தில் திருப்பூர் மண்டல செயலாளர் பெ.ச.சிறுத்தை வள்ளுவன், மண்டல துணைச் செயலாளர்கள் திருமா குணவளவன், இரா. அம்பேத்கர், மற்றும் பெருந்துறை சட்டமன்ற தொகுதி மாவட்ட துணை செயலாளர்கள் அண்ணாமலை, கிருஷ்ணமூர்த்தி, ஜெயக்குமார், கவிதா, ஜெனிபர் ரோஸ்லின் மேரி, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் அமுதா கிருஷ்ணமூர்த்தி, ராஜேஷ்குமார், இளஞ்சிறுத்தைகள் எழுச்சி பாசறை மாவட்ட செயலாளர் மணிகண்டன், மகளிர் விடுதலை இயக்க மாவட்ட செயலாளர் சுபாஷினி, இளஞ்சிறுத்தைகள் எழுச்சி பாசறை மாவட்ட அமைப்பாளர் நந்தினி, பெருந்துறை மேற்கு ஒன்றிய செயலாளர் ஜெகதீசன், கிழக்கு ஒன்றிய செயலாளர் ரமேஷ்வீரன், பெருந்துறை வடக்கு ஒன்றிய செயலாளர் குமார், சென்னிமலை ஒன்றிய செயலாளர்கள் நவீன்குமார், ஜெபராஜ், பெருந்துறை நகரசெயலாளர் மு.முருகசாமி, சென்னிமலை நகர செயலாளர் விஜயா, பெருந்துறை கருமாண்டி செல்லிபாளையம் பேரூர் செயலாளர் லதாமணி, காஞ்சிக்கோவில் பேரூர் செயலாளர் க.கந்தசாமி, கிழக்கு பெருந்துறை ஒன்றிய பொருளாளர் ஜீவா, பெருந்துறை ஒன்றிய துணை செயலாளர் சௌந்தர், பெருந்துறை ஒன்றிய பொருளாளர் தனலட்சுமி, கிறிஸ்துவ சமூக நீதி பேரவை ஒன்றிய செயலாளர் தீமோத்தேயு, பெத்தாம்பாளையம் பேரூர் செயலாளர் தாமோதரன், காஞ்சிக்கோயில் பேரூர் செயலாளர் சேகர் துரைசாமி, பெருந்துறை மேற்கு ஒன்றிய துணை செயலாளர் அபிராமி ஸ்ரீநிதி, இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறை மாவட்ட செயலாளர் பரமேஸ்வரன், காஞ்சிக்கோயில் பேரூர் செய்தி தொடர்பாளர் செண்பகம், விவசாய பாதுகாப்பு இயக்க மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகர், தொழிலாளர் விடுதலை முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் கௌதம், பெருந்துறை பேரூர் துணை செயலாளர் ரவிச்சந்திரன், பெருண்டிசெல்லிபாளையம் நகர துணை செயலாளர் சுமதி, இளஞ்சிறுத்தை எழுச்சி ஒன்றிய செயலாளர் ஸ்ரீநாத், மகளிர் விடுதலை இயக்க ஒன்றிய செயலாளர் லதா, கருமாண்டிசெல்லிபாளையம் பேரூர் துணைசெயலாளர் பிரபாகரன், காஞ்சிக்கோயில் பேரூர் துணைசெயலாளர் சின்னுச்சாமி, கருமாண்டிசெல்லிபாளையம் பெருந்துறை ஒன்றிய பொருளாளர் மகேந்திரன், மகளிர் மாவட்ட பொருளாளர் அம்சா, இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறை மேற்கு ஒன்றிய செயலாளர் அட்சயா, பெருந்துறை மேற்கு ஒன்றிய துணை செயலாளர் ராஜா, இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறை ஒன்றிய செயலாளர் சங்கீதா மற்றும் கிறிஸ்துவ சமூக நீதி பேரவை மாவட்ட அமைப்பாளர் நாச்சிமுத்து கொமரன் உள்ளிட்ட பல நிர்வாகிகள் திரளாக கலந்துகொண்டனர்.

## ஈரோடு அரசு மருத்துவமனை அருகில் சிவகார்த்திகேயன் நற்பணி இயக்கம் சார்பில் அன்னதானம்



ஈரோடு மாவட்டத்தில் "முயற்சி! முன்னேற்றம்!! முதலிடம்!!!" என்ற தாரக மந்திரத்துடன் செயல்பட்டு வரும் ஈரோடு மாவட்ட தலைமை சிவகார்த்திகேயன் நற்பணி இயக்கத்தின் சார்பில், நாள்தோறும் நற்பணி செய்வோம் என்ற நோக்கத்தின் அடிப்படையில் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை அருகில் பொதுமக்களுக்குச் சிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

பொதுமக்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் சமூகச் சேவைகளையும் தொடர்ச்சியாக வழங்கி வரும் இந்த இயக்கத்தின் சார்பில் அமைக்கப்பட்ட இந்நிகழ்வில், மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் உறவினர்கள், பொதுமக்கள் என 300-க்கும் மேற்பட்டோருக்குச்சுடச்சுடமதியஉணவு அன்னதானமாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஈரோடு மாவட்டத் தலைவர் பைஜ், மாவட்டச் செயலாளர் விக்னேஷ், மாவட்ட பொருளாளர் மோகனசுந்தரம், மாவட்டத் துணைத் தலைவர்கள் யாசர் அரபாத் மற்றும் ஸ்ரீபதி, திண்டல் பகுதிச் செயலாளர் சரண்குமார் உள்ளிட்ட நற்பணி இயக்கத்தின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு உணவினை வழங்கிச் சிறப்பித்தனர்.



மதுரை திருப்பரங்குன்றம் அடுத்துள்ள திருநகரில் அமைந்துள்ளது அரசு உதவி பெறும் முத்து தேவர் முக்குலத்தோர் பள்ளி. இப்பள்ளியில் திருப்பரங்குன்றம் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து வரும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் இங்கு பயின்று வருகின்றனர். இந்த நிலையில் இப்பள்ளியில் பயிலும் 11ஆம் வகுப்பு மாணவன் மாரி செல்வம் தொடர்ந்து இடைவிடாமல் 10 மணி நேரம் சிலம்பம் சுற்றி கின்னஸ் சாதனை முயற்சியை மேற்கொண்டுள்ளார். ஏற்கனவே இந்த மாணவன் தனது எட்டாவது வயதில் தொடர்ந்து இடைவிடாமல் ஐந்து மணி நேரம் சிலம்பம் சுற்றி சாதனை படைத்துள்ளார். முத்து தேவர் முக்குலத்தோர் பள்ளி வளாகத்தில் நடைபெறும் இந்த சாதனை முயற்சி நோபல் வேர்ல்டு ரெக்கார்டு புத்தகத்தில் இடம் பெற உள்ளது. தமிழ்நாடு சிலம்பம் கமிட்டி, சர்வதேச சிலம்பம் குழு, பள்ளி நிர்வாகம் இணைந்து இந்த நிகழ்ச்சியை நடத்தி வருகின்றனர். நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாக போதை விழிப்புணர்வு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாணவர்களின் உடற்கட்டுப்பாட்டுத்திறன் மேம்படுத்துவது போன்றவையை கருத்தில் வைத்து இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருவதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## ஆந்திராவில் 44.71 லட்சம் வாக்காளர்கள் பெயர் நீக்கம்



அமராவதி:

வாக்காளர் சிறப்பு திருத்தத்தின் முதல் கட்டப் பணிகள் (எஸ்ஐஆர்) முடிவுற்றதை தொடர்ந்து, ஆந்திர மாநிலத்தில் மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 4.16 கோடியாக உள்ளது. மேலும், 44.71 லட்சம் போலி வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.


ஆந்திர மாநில தலைநகர் அமராவதியில் நேற்று முன்தினம் மாநில தேர்தல் ஆணையர் விவேக் யாதவ் செய்தியாளர்களிடம் பேசியதாவது: ஆந்திர மாநிலத்தில் முதல்கட்ட எஸ்ஐஆர் பதிவுகளின் அடிப்படையில் மொத்தம் 4 கோடியே 16 லட்சத்து 27,694 வாக்காளர்கள் உள்ளனர். அந்தந்த முகவரிகளில் இல்லாதவர்கள் 7,76,900 பேர். ஆந்திராவை விட்டு வெளி மாநிலங்களுக்கோ அல்லது வெளி நாடுகளுக்கோ நிரந்தரமாக சென்று விட்டவர்களின் எண்ணிக்கை 14,34,112 ஆக உள்ளது.

வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள இறந்து போனவர்கள் மொத்தம் 15,19,558 பேர். இரு ஊர்களிலும் இடம் பெற்றவர்கள் 7,32,566 பேர். மற்றவர்கள் 8,387 பேர் என தெரிய வந்துள்ளது. மொத்தம் 44,71,523 வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலில் இருந்து அகற்றப்பட்டுள்ளன. அதிகபட்சமாக நெல்லூர் மாவட்டம் உள்ளது. இங்கு மொத்தம் 2,90,579 வாக்காளர்களின் பெயர்கள் அகற்றப்பட்டுள்ளன. அடுத்தபடியாக திருப்பதி மாவட்டத்தில் 2,87,759 பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. ஜூலை 31-ம் தேதி முதல் ஆகஸ்ட் மாதம் 30-ம் தேதி வரை பொதுமக்கள் இதுகுறித்து ஏதாவது சந்தேகமோ அல்லது தனிப்பட்ட கருத்தோ இருந்தால் தெரிவிக்கலாம். செப்டம்பர் 28-ம் தேதிக்குள் வாக்காளர்கள் தெரிவித்த கருத்துக்கள் பரிசீலிக்கப்படும். அக்டோபர் 3ம் தேதி இறுதி வாக்காளர்கள் பட்டியல் வெளியிடப்படும். இவ்வாறு தேர்தல் ஆணையர் விவேக் யாதவ் தெரிவித்தார்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு அமருமிடத்திற்குச் சென்று, கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, பயனாளிகளுக்கு செயற்கை கால்களை வழங்கினார்.

# Cook in Malviya Nagar hotel fire case gets bail; court says forensic report yet to establish cause



*A Delhi court on Monday granted bail to Kesar Negi, the cook employed at the Flourish B&B hotel in Malviya Nagar, where a devastating fire claimed the lives of 22 people.*

*While granting bail, the court observed that the forensic report determining the cause of the fire has not yet been submitted and hence criminal culpability cannot be attributed to the accused solely on the basis of a witness statement.*

*Negi was arrested after police investigation revealed that the fire began after an oil fryer was inadvertently left switched on while the cook prepared tea for himself, PTI news agency reported. How oil fryer triggered massive fire?*

*Police initially believed that the fire might have resulted from a short-circuit or a gas cylinder blast. The police have now revealed that the fire resulted from an unattended oil fryer which was left burning while the cook had gone on a tea break. The oil in the fryer reache its auto-ignition temperature and caught fire, selling the ceiling ablaze. It began spreading rapidly and was fueled by highly inflammable materials such as cartons stored within the premises.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.